# உபத்திரவ காலம்

# 1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# உபத்திரவ காலம்

~~~~~~~~~~~~~~~~~~~

**(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, ‘உபத்திரவ காலம்’ என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)**

~~~~~~~~~~~~~~~~~~~

233. சபை, வெதுவெதுப்பான சபை, தெரிந்துகொள்ளப்பட்ட மணவாட்டிக்கு புறம்பேயுள்ள எதுவுமே உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து கொல்லும். அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் எழுந்திருக்க மாட்டார்கள். "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம்

முடியுமளவும் உயிரடையவில்லை" (வெளி.19:5).. முன் குறிக்கப்பட்ட, தெரிந்து கொள்ளப்பட்ட, தேவனால் சொந்தமாக தெரிந்து கொளப்பட்ட மணவாட்டி மட்டுமே. "அது யார், சகோ. பிரான்ஹாமே?" எனக்குத் தெரியாது. அது யாரென்று என்னால் கூற இயலாது. ஆனால் அது இருக்கப் போகிறதென்று எனக்குத் தெரியும், ஏனெனில் தேவன் அவ்வாறு உரைத்துள்ளார். பாருங்கள்? அவர்கள் தான் உபத்திரவ காலத்துக்கு தப்பி மேலே எடுத்துக் கொள்ளப்படு வார்கள், மற்றவர்களோ உபத்திரவ காலத்தின் வழியாக இங்கு கீழே கடந்து செல்வார்கள். எல்லாமே ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பு கொல்லப்படும். அதன் பிறகு நீதிமான்கள் ஆயிரம் வருட அரசாட்சியின் போது வந்து ஆயிரம் ஆண்டுகள் வாழ்வார்கள்...

**64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #18**

~ ~ ~ ~ ~

324. **சபைக்குள் செல்வதற்கு வரிசையில் நிற்பது ஞாபகார்த்தமாக மட்டுமே இருக்குமானால், நாம் உபத்திரவ காலத்தின் வழியாக பிரவேசிக்காமல் போனால், என்ன நடக்கும்? நாம் சில கஷ்டங்களை காண வேண்டுமா?**

பாருங்கள்? நான்... இந்த கேள்வி ஒருக்கால் இதுவாக இருக்கலாம். நான் துரிதப்பட முயல்கிறேன். நான் அவ்விதம் செய்யக் கூடாது. இவைகளை வைத்து விட வேண்டும். ஏனெனில் ஒரு மணி நேரம் கழிக்க வேண்டிய சில இடம் கேள்வியில் வருகிறது, அதை விரிவாகக் கூற வேண்டும். நான் நிறுத்திக் கொள்கிறேன்.

229. பாருங்கள்? ஜனங்கள் இதை கூற விரும்புகின்றனர், அதாவது சபையானது உபத்திரவ காலத்தை சந்திக்கும் என்று

அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். பாருங்கள்? அது சந்திக்காது. அது சந்திக்க முடியாது (பாருங்கள்?), ஏனெனில் அது ஏற்கனவே மீட்கப்பட்டு விட்டது.

230. இப்பொழுது, சபையானது, லோத்தைப் போல் பெயர் "விசுவாசிகள், அவன் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து சென்று, அக்கியினின்று இரட்சிக்கப்பட்டான். நோவா உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து சென்று, அதற்கு மேல் தூக்கப்பட்டு, காமுடன் வெளி வந்து, அவனும் பூமியை மறுபடியும் மாசுபடுத்தினான். பாருங்கள்? லோத்து வெளியே வந்தான், அவனுடைய சொந்த குமாரத்திகள் அவனுடன் படுத்தனர், அவனுடைய குமாரத்திகளின் மூலம் அவனுக்கு பிள்ளைகள் பிறந்தனர். பாருங்கள்? ஆனால் ஆபிரகாமோ ராஜரீக சந்ததியை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியை,

பிறப்பித்தான். ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுதலில் மகிமைக்கு சென்றான். அவன் நடக்கச் சென்று வீட்டுக்கு சென்று விட்டான். அவன் உபத்திரவ காலத்தின் வழியாக செல்ல வில்லை. பார்த்தீர்களா?

231. பாருங்கள்? வேதம் முன்னடை யாளத்தின் மூலம் ஒருபோதும்... முன் னடையாளங்கள் ஒருபோதும் தவறாவ தில்லை. பாருங்கள்?, மணவாட்டி உபத்திரவ காலத்தின் வழியாக செல்வாள் என்று முன்னுரைக்கவில்லை... சபை யானது உபத்திரவ காலத்தின் வழியாக செல்லும்.

232. இப்பொழுது, ஜனங்கள், "ஆதி காலத்து பரிசுத்த வான்களைக் குறித் தென்ன? என்று கேட்கின்றனர். அது யுகங்கள் மாறுதலாகும். அது துன்புறுத்த லின் கீழ், சபைகாலங்களின் செய்தியைக் கேட்க நீங்கள் இங்கு இருந்திருந்தால்,

அவர்கள் எவ்விதம் இருளின் காலங்களின் வழியாக செல்ல வேண்டியிருந்த தென்றும், அவர்கள் துன்புறுத்தலை சகிக்க வேண்டியிருந்ததென்றும் அது காண்பிக் கிறது. ஏனெனில் சபை காலங்கள் ஒவ்வொன்றும் மேலும் மேலும் இருள டைந்து, முடிவில் அவர்கள் அவருடைய நாமத்தை மறுதலிக்கும் நிலையை யடைந்து, வேறொரு நாமத்தை எடுத்துக் கொண்டு வாழ்ந்து, ஆனால் மரித்தவர் களாயிருந்தனர் என்பதை அது காண்பிக் கிறது - சர்தை சபையின் காலத்தில். அதன் பிறகு அது பிலதெல்பியா காலத்துக்குள் வந்து, முடிவில் மணவாட்டியை வெளியே அழைக்கும் நேரத்தை அடைகிறது. மணவாட்டி எல்லா ஆக்கினைக்கும் தப்புகிறாள். பூமியின் மேல் வரவிருக்கும் ஆக்கினைக்கும் கோபாக்கினைக்கும் தப்பித்துக் கொள்ள அவள் பாத்திரரா யிருக்கிறாள் - அதன் வழியாக செல்

வதற்கு அல்ல, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள. பாருங்கள். இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? ஒவ்வொருவரும்?

**64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #18**

~~~~~

306. **மணவாட்டி எடுத்துக் கொள்ளப் பட்ட பிறகு, புத்தியில்லாத கன்னிகை எவராகிலும் இரட்சிக்கப்படுவார்களா, அல்லது எல்லோருமே இழக்கப்படுவார் களா?**

173. இல்லை! பாருங்கள், மணவாட்டி பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, புறஜாதி சபைக்கு எல்லாமே முடிவடைந்திருக்கும். தேவ ஆவியானவர் பூமியை விட்டுப்போய் விடுகிறார். "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்த மாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன்
~~~~~

இன்னும் பரிசுத்தமாகட்டும்." (வெளி.22:11). வேறு சொற்களில் கூறுவோமானால், பரிசுத்த ஸ்தலம் புகையினால் நிறைகிறது. அங்கு தான் வியாஜ்யத்தைக் குறித்து வழக்காட வழக்கறிஞர் நின்று கொண்டிருக்கிறார். கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுகிறார்; அவர் மத்தியஸ்தம் செய்த காலம் முடிவடைகிறது. எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது. அவர் பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று, மீட்பின் புத்தகத்தை வாங்கிக் கொண்டு, அவர் மீட்டுக் கொண்ட எல்லாவற்றையும் உரிமை கோரிப் பெற்றுக் கொள்கிறார். மத்தியஸ்த ஊழியம் அதன்பிறகு கிடையாது. எத்தனை பேர் அதை புரிந்து கொண்டீர்கள்? அது முத்திரைகளில் ஒன்றில் உள்ளது, அல்லது... ஆம், முத்திரைகளில், அப்படித்தான் நினைக்கிறேன், கிறிஸ்து தமது மத்தியஸ்த ஊழியத்

தினால் கிடைக்கப் பெற்றவர்களை உரிமை கோருவதற்கென புறப்பட்டு வருகிறார்.

174. இப்பொழுது, ஒரு நிமிடம், "புத்தியில்லாத கன்னிகை இரட்சிக்கப்படு வாளா?" இல்லை! நடப்பது என்னவா னாலும், இப்பொழுதே நடக்கிறது. அந்த காலத்துக்குப் பிறகு அவள்... இப் பொழுது, அவள் உபத்திரவ காலத்தின் வழியாய் கடந்து செல்ல வேண்டும். அதற்கு காரணம் என்னவென்றால், அவள் பிராயச்சித்தத்தை அதன் முழுமையில் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விட்டாள். அவள் ஒரு விசுவாசி, விசுவாசியைப்போல் நடந்து கொண்டவள், ஆனால் அவள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்ல வேண்டும். "வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிட்டு, அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று' என்று வேதம்

உரைக்கிறது (வெளி. 12:15-17). அது எத்தகைய ஒரு நேரமாயிருக்கும்!

**64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #18**

~~~~~

உலகம் முழுவதிலும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருந்து காணப்படுவார்கள். எடுத்துக்கொள்ளப் படுதல் நிகழும். சபை வீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும். அதன் பிறகு உபத்திரவ காலம் தொடங்கும். ஓ, என்னே, அந்த காலத்தில் இங்கிருக்க எனக்கு விருப்ப மில்லை. நாம் எவருமே அக்காலத்தில் இங்கு இராதபடி தேவன் தடை செய்வா ராக. ஏனெனில் ''அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ள வன் இன்னும் நீதி செய்யட்டும்.“

(வெளி. 22:11). ஆட்டுக்குட்டியானவர் மீட்பின் புத்தகத்துடன் புறப்பட்டு வந்து, மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்டு
~~~~~

விட்ட பிறகு, அதைப் புறக்கணிக்கிற வர்கள்- யூதர் புறஜாதியார் இருவருமே- உபத்திரவ காலத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். என்ன ஒரு உபத்திரவ காலம்! எனக்கு அது வேண்டாம். "கர்த்தாவே, இப்பொழுது என்னைப் பரிசுத்தமாக்கும்." அது நல்ல நசரின் போதகம், இல்லையா? (சகோ. நெவில் "ஆமென்" என்கிறார் - ஆசி). அது உண்மையும் கூட. அது உண்மை . அது சரி.

"ஆண்டவரே, உமது பரிசுத்த ஆவி யினால் என்னை நீரப்புவீராக. கர்த்தாவே, இப்பொழுதே உலகம் அனைத்தையும் என்னை விட்டு எடுத்துப் போடும். எனக்கு ஒன்றும் வேண்டாம்..." அந்த வயோதிப கறுப்பு நிறமுள்ள சகோதரன், "ஐயா, பயணச்சீட்டை என் கையில் வைத்திருக் கிறேன். அது ஏற்கனவே துவாரமிடப்பட்டு விட்டது (punched). அன்று காலை நான் நதிக்கரைக்கு வரும் போது, எனக்கு

எந்தவித தொல்லையும் இருக்கக்கூடாது" என்று கூறினது போல். அது மிகவும் உண்மை . எனக்கு எந்த தொல்லையும் வேண்டாம். பயணச்சீட்டை உங்கள் கையில் வைத்திருங்கள். ஏனெனில் நாம் கடந்து செல்லப் போகிறோம். சற்று சிந்தித்துப் பாருங்கள், மீட்பின் மகத்தான நேரம் சமீபமாயுள்ளது.

## 63-07-14E உன்னை தாழ்த்து

~ ~ ~ ~ ~

387. இப்பொழுது திறக்கப்பட்ட ஆறாம் முத்திரையிலும் மூன்றுவித நோக்கங்கள் அடங்கியிருப்பதை நாம் காணலாம். இப்பொழுது அம்மூன்று நோக்கங்களும் இவைகளே.

388. முதலாவதாக, உறங்கிக் கொண் டிருக்கும் கன்னிகைகள் சுத்திகரிக்கப் படுவதற்கென உபத்திரவ காலத்தில் பிரவேசிக்க வேண்டும். அவளிடமிருந்து

அவிசுவாசம் என்னும் பாவம் போக்கப்பட வேண்டும். செய்தியை அவள் புறக்கணித்த தால் அவள் சுத்திகரிக்கப்பட வேண்டும்! இது உபத்திரவ காலத்தில் நிகழ்கின்றது. வெளிப்படுத்தல் 6-ம் அதிகாரத்திலும் 7ம் அதிகாரத்திலும் இடையே அவள் சுத்திகரிக்கப்பட்டு, அவளுக்கு வெண் வஸ்திரம் அளிக்கப்படுகின்றது. அவள் மணவாட்டியல்ல, அவள் சபையைச் சார்ந்தவள். செய்தியை ஏற்றுக் கொள்வ தற்கு அவளுக்குச் சந்தர்ப்பம் வாய்க்காம லிருந்திருக்கலாம். அல்லது கள்ளத்தீர்க்க தரிசிகளின் மூலமாய் அவர்கள் கண்கள் மறைக்கப் பட்டிருக்கலாம். எனினும், அவர்கள் உத்தம இருதயம் படைத்த வர்கள். தேவன் அவர்கள் இருதயங்களை அறிவார். அவர்கள் உபத்திரவ காலத்தில் சுத்திகரிக்கப்படுகின்றனர்.

389. வேறொரு சுத்திகரிப்பின் காலம் வருகின்றதைக் கவனித்தீர்களா? அது

இஸ்ரவேலர் ஒன்று கூடும்போது நிகழும். இது இரண்டாம் நோக்க மாகும். உபத்திரவ காலத்தில் தேவன் இஸ்ரவேலரை சுத்திகரிப்பார், அங்கு ஒன்று கூடும் லட்சக்கணக்கானவர்களில் 1,44,000 பேர் தெரிந்தெடுக்கப்பட்டு சுத்திகரிக்கப் படுகின்றனர். தேவன் இஸ்ரவேலரை சுத்தி கரிக்கின்றார்.

390. பூமி முழுவதும் சுத்திகரிக்கப்பட வேண்டுமென்பதை கவனியுங்கள். சந்திரனும், நட்சத்திரங்களும், இயற்கை யாவும் சுத்திகரிக்கப்படும் அது என்ன வென்று தெரிகின்றதா? பூமியானது சுத்திகரிக்கப்பட்டு, தன்னை புதுப்பித்துக் கொண்டு, ஆயிரம் வருட அரசாட்சிக்கு ஆயத்தமாகின்றது. ஆயிரம் வருட அரசாட்சி வரவிருக்கின்றது. அழுக்குள்ள யாவும் ஆறாம் முத்திரையின்போது சுத்திகரிக்கப்படவேண்டும்.

~~~~~

226. இப்பொழுது என்ன நேர்ந்தது? பயங்கரமான உபத்திரவ காலத்தில் அவர்கள் சுத்திகரிக்கப்படுகின்றனர்.

227. இப்பொழுது, ஒரு நல்ல ஸ்திரீயாகிய கன்னிகையையே, அவளிடம் எண்ணெய் இல்லாமலிருந்த காரணத்தால், தேவன் அவளை உபத்திரவத்தின் மூலம் சுத்திகரிக்கச் சித்தம் கொண்டால்-இஸ்ரவேல் கோத்திரங்களையும் அவர் உபத்திரவ காலத்தில் சுத்திகரிக்கின்றார். ஏனெனில் அது நியாயத்தீர்ப்பாகும். ஆனால் நீங்கள் பாருங்கள்... இஸ்ரவேலர் சுத்திகரிக்கப்பட்ட பிறகு 1,44,000 பேர் வருகின்றனர். அவ்வாறே உறங்கிக் கொண்டிருந்த கன்னிகைகளும் சுத்திகரிக் கப்பட்டு வெள்ளையங்கிகளைத் தரித்துக் கொள்கின்றனர். பாருங்கள்? எவ்வளவு
~~~~~

பூரணமாக அழகாகப் பொருந்துகின்றதைப் பாருங்கள்.

228. யாக்கோபு உபத்திரவ சமயத்தைக் கடந்தது போன்றதாகும், அவர்கள்... யாக்கோபு தவறு செய்தான். யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்குத் தீங்கிழைத் ததால் அவன் உபத்திரவ காலத்தில் பிரவேசிக்க வேண்டியதாயிருந்தது. பாருங்கள்? சேஷ்ட புத்திர பாகத்தைப் பெறுவதற்கென அவன் சகோதரனை ஏமாற்றினான். அவன் பெயர் யாக்கோபு என்பதிலிருந்து இஸ்ரவேல் என்னும் பெயராக மாறுவதற்கு முன்பாக அவன் சுத்திகரிப்புக்குள் பிரவேசிக்க வேண்டியதா யிருந்தது. இது தேவனுடைய ஒழுங்குக்கு ஒரு உதாரணம். அது இன்றைய நாளுக் கென்று உதாரணமாக உள்ளது.

**63-03-24E ஏழாம் முத்திரை**

~ ~ ~ ~ ~

275. பாருங்கள், அவர்கள் கொலை செய்யப்பட வேண்டுமென்று முன்குறிக்கப் பட்டுள்ளனர். நீங்கள் பாருங்கள்?

தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்ச காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

276. பாருங்கள், அதாவது, அவர்கள் கொலை செய்யப்பட வேண்டு மென்று தேவனால் முன்னமே தீர்மானிக்கப்பட்டது. இவ்வேதவாக்கியம் அவ்வாறு கூறு கின்றது. அதுவரைக்கும் அவர்கள் இளைப்பாற வேண்டும். 'இப்பொழுது நீங்கள் அங்கிகளைப் பெற்றுக் கொண்டீர் கள். ஆகவே நீங்கள் உன்னத வீட்டை அடைவீர்கள். சிறிது காலம் காத்தி ருங்கள்' என்று அவர்களுக்குச் சொல்லப்படு கின்றது.

277. இப்பொழுது கவனியுங்கள். இப்பொழுது கவனியுங்கள். ''உங்கள் சகோதரர், கொலை செய்யப்பட போகிற வர்களாகிய உங்கள் சகோதரர்" என்பதைக் கவனியுங்கள். அவர்கள் சகோதரர்கள் கொல்லப்பட வேண்டும். அதாவது உபத்திரவ காலத்தில் அழைக்கப்படும் 1,44,000 பேர்.

**63-03-22 ஐந்தாம் முத்திரை**

~~~~~

108. சபையானது உபத்திரவ காலத்தில் பிரவேசிக்கும் என்று எங்ஙனம் யாராகிலும் கூறமுடியுமென்று எனக்குப் புரியவே யில்லை. அது எதற்காக உபத்திரவ காலத்திற்குள் பிரவேசிக்கவேண்டும்? அதற்குத்தான் பாவமென்பதே கிடை யாதே! நான் சபையைக் குறிப்பிடவில்லை. சபையானது உபத்திரவ காலத்தில் பிரவேசிக்கும். நான் இங்கு குறிப்பிடுவது
~~~~~

மணவாட்டியாகும். மணவாட்டியினிடம் பாவமென்பது கிடையாது. அது முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டது. அதன் வாசனை என்பதும் இல்லை. அதில் சிறிதேனும் விடப்படவில்லை. அவர்கள் தேவனுடைய சமூகத்தில் பரிபூரணமுள்ளவராய் இருக் கின்றனர். அவர்களைச் சுத்திகரிக்க உபத்திரவம் அவசியமில்லை. ஆனால் மற்றவர்க்கு அது அவசியம். சபையானது உபத்திரவ காலத்திற்குள் செல்லவேண்டும். ஆனால் மணவாட்டிக்கு அது அவசிய மில்லை.

109. இப்பொழுது, இதற்கு முன்னடை யாளங்களாக இருப்பவைகளை நாம் எடுத்துக் காண்பித்தோம். நோவா உபத்திரவ காலத்திற்குள் சென்று வெளிவந்து, பாவத்தில் விழுந்தான். நோவா உபத்திரவ காலத்திற்குள் கடந்து சென்று வெளி வருவதற்கு அடையாள மாயிருந்தான். பாருங்கள்? இப்பொழுது,

அவர்கள் உபத்திரவத்திற்குள்ளாகச் சென்றனர். ஆனால் ஏனோக்கு அதற்கு முன்னால் எடுக்கப்பட்டான். உபத்திரவ காலத்திற்கு முன்பு பரிசுத்தவான்கள் எடுக்கப்படுவார்கள் என்பதற்கு ஏனோக்கு ஒரு உதாரணமாயிருக்கிறான்.

## 63-03-21 நான்காம் முத்திரை

~~~~~

79. கிறிஸ்துவின் மணவாட்டி உபத்திரவ காலத்திற்குள் செல்கிறாள் என்று எங்ஙனம் ஒருவன் கூற முடியும்? என்னால் அதைப் புரிந்துகொள் ளவே முடியவில்லை. பாருங்கள்? அவள் உபத்திரவ காலத்திற்கு முன்பு எடுக்கப்படுகிறாள். சபையானது ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட் டிருந்தால், மணவாட்டி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் நியாயந்தீர்க்கப்பட்டிருந்தால், தேவன் பரிபூரணமாக முற்றிலும் பாவமில்லாத
~~~~~

ஒருவனை எங்ஙனம் நியாயந்தீர்க்க முடியும்?

"அவ்விதமான நபர் ஒருவரும் இல்லை'' என்று நீங்கள் கூறலாம்.

80. மறுபடியும் பிறந்த உண்மையான விசுவாசி ஒவ்வொருவனும் தேவனுக்கு முன்பாக பரிபூரணமாக, முற்றிலுமாக பாவமில்லாதவனாயிருக்கிறான். அவன் தன் கிரியைகளில் சார்ந்திராமல், பாவங்களை அறிக்கையிட்டு பாவங்கள் நீங்கப்பட இயேசுவின் இரத்தத்தின் பேரில் சார்ந்திருக்கிறான். வேதம் அவ்வாறே கூறுகின்றது. பாருங்கள்? “தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்''. ஏனெனில் அவன் பாவம் செய்யமுடியாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்னும் வெண்மையாக்கும் திரவம் ஒரு மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே இருக்கும் போது, அம்மனிதனைப் பாவி

என்று நீங்கள் எவ்வாறு அழைக்கலாம்? அந்த வெண்மையாக்கும் திரவம் பாவத்தைச் சிதறடித்து, அதை ஒன்று மில்லாமல் செய்யும். பாருங்கள்? இயேசு கிறிஸ்துவின் சுத்த இரத்தம் பாவத்தை அதன் வழியாகக் கடந்து செல்ல எவ்வாறு அனுமதிக்கும்? அது ஒருக்காலும் முடியாது.

81. "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக் கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்க கடவீர்கள்'' என்று இயேசு சொன்னார் (மத். 5:48). நாம் சற்குணராயிருக்க வேண்டு மென்று இயேசு சொன்ன காரணத்தி னால்தான் அந்த எண்ணமே நம் மனதில் உதித்தது. நாம் சற்குணராயிருக்க வேண்டு மென்று இயேசு விரும்பினால், அதற்கான வழியையும் அவர் உண்டாக்கவேண்டும். அவர் தமது சொந்த இரத்தத்தின் மூலம் அவ்வழியை நமக்கு வகுத்துள்ளார்.

## 63-03-18 முதலாம் முத்திரை

~ ~ ~ ~ ~

232. நித்திரை செய்த கன்னிகைள் எப்பொழுது நித்திரையை விட்டு எழும்பி னார்கள் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? அவள் என்ன வென்று அழைக்கப்பட்டாள்? அவர்கள் பத்து பேர்களானவர்கள் மணவாளனை சந்திக்கப் புறப்பட்டுச் சென்றார்கள். அது சரிதானே? அவர்களில் ஐந்து பேர்கள் புத்தியுள்ளவர்களாயிருந்தனர், தங்கள் விளக்கில் (தமிழ் வேதாகமத்தில் 'விளக்கு' என்பதற்குப் பதிலாக 'தீவட்டி' என்று கூறப்பட்டுள்ளது - மொழிபெயர்ப்பாளர்) எண்ணெயைக் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர். வேதாகமத்தில் எண் ணெயானது எதைக் குறிக்கிறது என்பதைப் பற்றி எத்தனை பேர் அறிந்திருக்கிறீர்கள்? எண்ணெய் பரிசுத்த ஆவியைக் குறித்தும். அந்தப் பத்துக் கன்னியரைக் குறித்து

எவராவது, அவர்கள் பரிசுத்தமாக்கப்பட வில்லை என்று கூறிட முடியாது. அவர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்தமாக்கப்பட்டே யிருந்தனர். அவர்கள் அனைவரும் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களில் ஐவர் வெளிப்படுத்துதலின் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆவியினால் நிரப்பப்பட்டு, வாசலைப் போய் அடைய, பாருங்கள், போதுமாமன அளவு ஞானமுள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் ஐவரும் தங்கள் விளக்குகளில் எண்ணெயை உடையவர்களாக இருந்தனர். மற்றவர்களுக்கோ எண்ணெய் இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் நித்திரை தெளிந்து எழுந்தபோது, அவர்கள் இவர்களிடம் வந்து, “ஓ! ஓ! உங்களிலுள்ள பரிசுத்த ஆவியை எனக்குக் கொஞ்சம் கொடுங்கள். எனக்குக் கொஞ்சம் கொடுங் கள்' என்று கெஞ்சினார்கள். ஆம்.

233. ''மன்னிக்கவும் சகோதரி, எனக்குப் போதுமான அளவுதான் என்னிடம் உள்ளது. உங்களுக்கு கொடுப்பதற்கு உபரியாக என்னிடம் இல்லை'' என்று இவர்கள் கூறினார்கள்.

234. எனவே, அப்பொழுது, அவர் கூறினார், “போய் ஜெபித்துக் கேளுங்கள்'' என்று. அவ்வாறு அவர்கள் போய் கொஞ்சம் எண்ணெயைப் பெற்றுக் கொள்ளப் போயிருக்கையில், மண வாளன் வந்துவிட்டார். உடனே, புத்தி யுள்ள கன்னியர் கலியாண விருந்துக்காக உள்ளே பிரவேசித்துவிட்டனர், கதவு அடைக்கப்பட்டது, அப்பொழுது புத்தியில்லாதவர்கள் கைவிடப்பட்டு, மகா உபத்திரவக் காலத்திற்குள் போகின்றனர். இன்னும் கொஞ்சம் கவனித்து, மேற்கொண்டு வரும் இரு வசனங்களில் படித்தால், அவர்கள் நேராக மகா

உபத்திரவ காலத்திற்குள் போய்விடுவதை நீங்கள் காண்பீர்கள். பாருங்கள்?

## 60-12-10 பிலதெல்பியா சபையின் காலம்

~~~~~

119. அந்தவிதமான நிலைக்குள் தான் அது போய்க் கொண்டி ருக்கிறது. இந்த இடத்தில் நான் சற்று நிறுத்தி நிதானிக்க விரும்புகிறேன். இந்த மகா உபத்திரவத் தின் காலத்திற்குள்ளாக, தங்கள் தீவட்டி களில் எண்ணெயைப் பெற்றிராத புத்தி யில்லாத உறங்கும் கன்னியர்கள் தள்ளப் படுவார்கள். அவர்கள் நல்லவர் களாக இருப்பினும், ஆலயத்திற்கு ஒழுங்காக போய் வந்தாலும், ஸ்தாபனங்களைச் சார்ந்து கொண்டவர்களாக ஆகி விட்டனர்; எண்ணெய் வாங்க அவர்கள் வருகிறார் கள். ஆனால் அப்பொழுது காலதாமதம் ஆகிவிட்டபடியினால் அவர்களுக்கு எண்ணெய் கிடைக்கவில்லை. எனவே
~~~~~

எண்ணெய் இல்லாதபடியினால் அவளை தேவன் மகா உபத்திரவத்திலே தள்ளி விடுவார். அவள் அதற்குள் செல்வாள். கத்தோலிக்க சபை மகா உபத்திரவ காலத்திற்குள் போகப் போகிறது. அவளுடைய பிள்ளைகள் யாவரும் தங்கள் தாயோடு சேர்ந்து மகா உபத்திரவ காலத்திற்குள் போகப் போகிறார்கள்.

## 60-12-08 தியத்தீரா சபையின் காலம்

~~~~~

400. உபத்திரவக் காலத்தைக் குறித்து அநேகர் தவறான அபிப்பிராயத்தில் இருக்கின்றனர். ஆனால், கர்த்தருக்கு சித்தமானால், இந்த வாரத்தில், கர்த்தருடைய உதவியைக் கொண்டு, அதைப் பற்றிய தவறான கருத்தை நீக்கி, தெளிவான - சரியான கருத்தைக் காண்போம். மகா உபத்திரவ காலத்தைக் குறித்து ஒரு முன்னடை யாளத்தை நீங்கள் வேதத்தில்
~~~~~

காண்பீர்களாயின், அதற்கு யாக்கோபின் இக்கட்டின் நாட்களைத் தான் சாயலாகக் கொள்ள முடியும். யாக்கோபின் இக்கட்டுக் கும், புறஜாதிகளுக்கும் எந்த வித சம்பந்தமுமில்லை. புறஜாதிகளுக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. அவ்வாறாக வேதத்தில் முன்னடையாள மில்லை. உபத்திரவ காலத்திற்கு முன்பாக புறஜாதி சபையானது எடுத்துக் கொள்ளப் படுகிறது.

## 60-12-04M இயேசுகிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல்

~ ~ ~ ~ ~

39. கிறிஸ்து ஒவ்வொரு தலைமுறை யினூடாகவும் ஒவ்வொரு தேசத்திற்கும் தம்மைத்தாமே அறிவித்துக் கொண்டிருக் கிறார். அவர் இன்றும் அதைச் செய்து கொண்டிருக்கிறார். பெயரளவேயான சபைகள் தூங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆவிக்குரிய சபையோ விழித்துக் கொள்கிறது. நித்திரை செய்யும் கன்னிகை உறங்கச் சென்றிருக்கிறாள், அவள் உபத்திரவ காலத்தின் வழியாகச் செல்லு வாள். ஆனால் தன்னுடைய விளக்கில் எண்ணெயைக் கொண்டிருப்பவள் ஆயத்த மாயிருக்கிறாள். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

## 58-02-02 தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்

~~~~~

94. ஆனால், அது அவ்வளவு நெருக் கத்தில் இருக்குமானால், எந்த ஒரு போதக ருக்கும் தெரியும், உபத்திரவ காலத்திற்கு முன்னர் சபையானது எடுத்துக்கொள்ளப் படுதலில் போகும் என்று. ஆக அவ்வளவு நெருக்கமாயிருக்குமானால், பொழுது விடிவதற்குள் சம்பவிக்க கூடுமானால், எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்து
~~~~~

என்ன? அதை காட்டிலும் இது மிக நெருக்கமாக இருக்கிறது. ஓ, கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக! கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. கையெழுத்து எழுதப்பட்டாயிற்று, வேதத்தில் எழுதப்பட்டுள்ளது, அதை காணும்படியாக நாமும் ஜீவித்து கொண்டிருக்கிறோம்.

## 58-01-08 சுவற்றின் மேல் எழுதப்பட்ட கையெழுத்து

~~~~~

226. "உபத்திரவ காலத்தில் மரித்த சபை (பாருங்கள்?) உயிர்தெழுதலில் இருக்குமா? - இரண்டாம் உயிர்த்தெழுதலில்.

227. “அவர்களும் தேவபக்தியில்லாதவர்கள் உயிரோடெழும் வரைக்கும் காத்திருக்க வேண்டுமா?" நீதியுள்ளவர்
~~~~~

களும் அநீதியுள்ளவர்களும் ஒரே நேரத்தில் எழுந்திருப்பார்கள்.

228. “அவர்கள் ஆயிரம் வருட அரசாட்சியின் போது மறுபடியும் உயிரோடிருப்பார்களா?" இல்லை! மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை” (வெளி. 20:5). இப்பொழுது, இது மிகவும் சுருக்கமான பதில், ஆனால் நான் உறுதி கொண்டிருக்கிறேன்...

**64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #19**

~~~~~

93. அவிசுவாசிகள் புத்தியில்லாத கன்னிகைகளுடன் உபத்திரவ காலத்திற்குள் பிரவேசிப்பார்கள், அந்த மற்றெல்லாருமே (அவிசுவாசிகள், புத்தியில்லாத கன்னிகைகள்), மற்றும் வெளியே எடுக்கப்படும் இஸ்ரவேலில் மீதியானவர்களும்.

**64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #20**
~~~~~

~~~~~

394. **மல்கியா 4ல் உரைக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசி தான் வெளிப்படுத்தல் 7:9ல் உரைக்கப்பட்டுள்ள மீதியானவர்களையும், அவர்கள் உபத்திரவ காலத்திற்குள் செல்வ தற்காக இருந்த போதிலும், அழைப்பவராக இருப்பாரா?**

77. இல்லை, இல்லை! வெளிப்படுத் தல் 7ம் அதிகாரத்தில் 144,000 பேர் முத்திரையிடப்படுவதை யோவான் காண்கிறான். அதன் பிறகு அவன் ஒருவனும் எண்ணக் கூடாத திரளான கூட்டமாகிய ஜனங்களைக் காண்கிறான், அதுதான் மணவாட்டி. அதற்கு... அது. ... மல்கியா 4ன் ஊழியம் முடிவு பெற்று மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுகிறாள், அதன் பிறகு எலியாவும் எலிசாவும் (மோசேக்கு பதிலாக எலிசா என்று சொல்லி விடுகிறார் - தமிழாக்கியோன்)
~~~~~

பூமிக்குத் திரும்ப வருகின்றனர். சபையா னது உபத்திரவ காலத்தினூடே செல்லும், ஆனால் எலியாவுக்கும் எலிசாவுக்கும் புத்தியில்லாத கன்னிகைகளுடன் எவ்வித சம்பந்தமும் கிடையாது

**64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #20**

~~~~~

**சபை காலம் முடிவடைந்து அந்தகாரம் சூழத்தொடங்கி, மணவாட்டி அழைக்கப்பட்டு விட்டிருந்தால், நாம் ஏற்கனவே உபத்திரவ காலத்தில் பிரவேசித்து விட்டோமா?**

இல்லை, இல்லை, இல்லை, நீங்கள்... இந்த கேள்விக்கு விடையளிக்க சற்று அதிக நேரம் இருந்தால் நலமா யிருக்கும். பாருங்கள். பாருங்கள்? மணவாட்டி சபையை விட்டு எடுக்கப்படும் போது, சபைகாலம் முடிவடையும். லவோ
~~~~~

திக்கேயா குழப்பத்துக்குள் செல்லும்; மணவாட்டி மகிமைக்குச் செல்கிறாள். புத்தியில்லாத கன்னிகைகளின் மேல் 3 1/2 ஆண்டுகள் உபத்திரவ காலம் வந்திறங்கும். இஸ்ரவேல் அப்பொழுது தன் தீர்க்கதரிசனத்தைப் பெற்றுக் கொண்டிருப்பாள்; பிறகு இஸ்ரவேலுக்கு உபத்திரவ காலம் தொடங்குகிறது; அதன் பிறகு அர்மகெதோன் யுத்தம் உண்டாகி, அது எல்லாவற்றையும் அழித்து போடும். பிறகு மணவாட்டி மணவாளனுடன் ஆயிரம் வருட அரசாட்சிக்காக திரும்பி வருகிறாள்; அதன்பிறகு வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு வருகிறது; அதன்பிறகு புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகி, புதிய நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அப்பொழுது காலமும் நித்தியமும் ஒன்றாக இணைகிறது.

**64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #20**

~~~~~

156. "இப்பொழுது கர்த்தரை விசுவாசித்து, நீர் பிரசங்கிக்கும் விதமாக விசுவாசியாதவர்களைக் குறித்தென்ன?" அவர்கள் இதை விசுவாசிக்க வேண்டிய தில்லை. நான் பிரசங்கிக்கும் விதமாக அவர்கள் விசுவாசிக்க வேண்டியதில்லை. பாருங்கள்? அவர்கள் அதை விசுவாசிக்க வேண்டியதில்லை. "... கடைசிக் காலச் செய்தியை விசுவாசியாதவர்கள். அவர்கள் இரட்சிக்கப்படுவார்களா?" ஆம், அவர்கள் கர்த்தரை விசுவாசிப்பார்களானால். பாருங்கள்? அவர்கள் இணங்காமல், "அவர் வார்த்தை என்று நான் விசுவாசிக்க மாட்டேன். இது சரியென்று நான் விசுவாசிக்க மாட்டேன். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் பேரில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்பார்களானால், அவர்கள் எதை நோக்கிச்செல்கின்றனர் என்பதை அது காண்பிக்கிறது - உபத்திரவ காலத்தை
~~~~~

நோக்கி. ஆனால் வார்த்தையை அதன் முழுமையில் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள், அதை நான் பிரசங்கிப்பதனால் அல்ல, வேதம் அவ்விதம் உரைக்கிறது. அதை ஏற்றுக் கொள்கிறவர்கள் விடுதலையடைகின்றனர், ஏனெனில் வார்த்தை ஏற்கனவே நியாயந் தீர்க்கப்பட்டு விட்டது.

157. ஏற்கனவே ஒன்றுக்கு தண்டனைக்கான கிரயம் செலுத்தப்பட்டிருந்தால், நீதியுள்ள நியாயாதிபதி அதற்காக ஒரு மனிதனை இரு முறை நியாயந்தீர்க்க முடியுமா? நான் அடகு கடையில் இருந்து, நீ அங்கு வந்து, "இவனை நான் மீட்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, என் மீட்புக்கான கிரயத்தை நீ செலுத்தி விடுவாயானால் (அதுவே நான் அடகு கடையிலிருந்ததனால் உண்டான தண்டனை), அடகு கடையின் சொந்தக்காரன் அதை எப்படி மறுபடியும் கேட்க முடியும்? நான் மறுபடியும் என்னை

விற்றுப் போட்டாலொழிய . பார்த்தீர்களா? வார்த்தையின் பரிபூரணத்தை நான் புறக்கணிக்கும் போது, நான் மீண்டும் அடகு கடைக்குச் சென்று விடுகிறேன். பாருங்கள், பாருங்கள். அதன் பிறகு, என்னால் கூடுமானால், போராடிக் கொண்டு வெளியே வருவேன். ஆனால் அவர் என்னை மீட்டுக் கொண்டார். சரி, நான் நம்புகிறேன், அது... இன்னும் எத்தனையோ கேள்விகள் இங்குள்ளன, அவைகளைப் பார்க்க விரும்புகிறேன் (ஒலிநாடாவின் முதல் பக்கம் முடிகிறது. இரண்டாம் பக்கத்தில் கேள்வியின் ஒரு பாகம் இல்லை - ஆசி).

**64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #17**

~~~~~

151. பிறகு, அந்த நேரத்தில்... பாருங் கள், புறஜாதி மணவாட்டி பரலோகத்தில் இருக்கிறாள், நித்திரையடைந்துள்ள
~~~~~

கன்னிகை, புறஜாதி கன்னிகை: அந்த நேரத்தில் இரட்சிக்கப் படுவதில்லை; அவள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டாள், ஆனால் மணவாட்டியில் இராத படிக்கு அவள் புறக்கணிக்கப்பட்டாள். அவள் சுத்திகரிப்புக்காக உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்கிறாள், ஏனெனில் அவள் தனக்கு சுத்திகரிப்பு அளிக்கும் வார்த்தையாகிய கிறிஸ்துவை புறக்கணித்து விட்டாள். அவளுடைய செய்கைகளுக்காக அவள் பாடுபட வேண்டும், ஆனால் வார்த்தையாகி விட்ட மணவாட்டியோ; கிறிஸ்து முழுவதுமாக அவளுக்காக பாவநிவிர்த்தி செய்து விட்டார், ஏனெனில் அவரே வார்த்தையா யிருக்கிறார். சரீரம் கிழிக்கப்பட்டது; அந்த சரீரம் கிழிக்கப்பட்ட போது, மணவாட்டி அந்த சரீரத்தில் இருந்தாள், ஏனெனில் அது எல்லாமே வார்த்தையாயுள்ளது! ஆமென்! உங்களுக்கு விளங்குகிறதா?

**64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #17**

~~~~~

247. **சகோ. பிரான்ஹாமே, இந்த கேள்வி இங்குள்ள எங்கள் பலருக்கு ஒருவிதம் குழப்பமாயுள்ளது. சில ஒலிநாடாக்களில், மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு யூதர்கள் மட்டும் இரட்சிக்கப்படுவதாக நீர் கூறியிருக்கிறீர்** (அது கோடிடப்பட்டிருக்கிறது). **எடுத்துக் கொள்ளப்படுதலில் போகாதிருக்கிற புறஜாதிகளைக் குறித்து தயவுகூர்ந்து முழுவதுமாக விளக்கவும். எடுத்துக் கொள்ளப்படுதலில் விடப்பட்ட புறஜாதிகள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து சென்று தங்கள் ஜீவனை இயேசுவின் காட்சியினிமித்தம் கொடுத்தார்கள் என்று நீர் கூறினீர் என்று எண்ணி**
~~~~~

**னேன். அவர் புறஜாதிகளிலிருந்து யூதரிடம் திரும்பும்போது புறஜாதிகள் இரட்சிக்கப்பட இனி வேறு தருணமே இராதா, இரட்சிக்கப்பட்டு ஆனால் கடைசி கால சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து சென்று முடிவில் இரட்சிக்கப்படுவார்கள். இது சரியா? தயவு செய்து விளக்குங்கள். ஏனெனில் மிகவும் சிறிய எண்ணிக்கையே எடுத்துக்கொள்ளப் படுதலில் செல்வார் கள். என்று கூறியிருக்கிறீர். கர்த்தரை விசுவாசித்து, ஆனால் நீர் பிரசங் கிக்கும் விதமாக இந்த கடைசி காலச் செய்தியை விசுவாசிக்காத ஜனங் களைக் குறித்தென்ன? அவர்கள் இரட்சிக்கப்படுவார்களா?** அந்த சகோதரி

தன் பெயரைக் கையொப்பமிட்டிருக் கிறாள்.

145. இப்பொழுது. இது மிகவும் நல்ல கேள்வி. இப்பொழுது முதலாவதாக, உபத்திரவ காலத்தின் போது புறஜாதி யாரின் நாட்கள் முடிவடைந்திருக்கும் என்று நான் கூறியதன் பேரில் தான் குழப்பம் நேர்ந்துள்ளது. இப்பொழுது, நான் காணமுடியாதது என்னவெனில், வேதத்திலுள்ள புறஜாதியினர்... புறஜாதி மணவாட்டி , மணவாட்டி, புறஜாதி சபை அல்ல, புறஜாதி சபை உபத்திரவ காலத் தின் வழியாக செல்லும் (பாருங்கள்?), ஆனால் அவர்களுடைய ... பாருங்கள், மணவாட்டி தெரிந்து கொள்ளப்பட்ட கூட்டம்; அவர்கள் எடுத்துக் கொள்ளப் படுதலில் செல்வதைத் தவிர, வேறு எதன் வழியாகவும் செல்வதில்லை. அவர்கள் மறுரூபமடைந்து, இவ்வுலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். பாருங்

கள்? இப்பொழுது. இதை நான் இங்குள்ள மற்றொரு கேள்வியில் விளக்கி, லூத்தரி லிருந்து படிப்படியாகக் கொண்டு வருகி றேன், அப்பொழுது அதன் அர்த்தம் என்ன வென்று நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அது சரீரம் முதிர்வடைவது. பாருங்கள்?

**64-08-23M கேள்விகளும் பதில்களும் COD #17**

~~~~~

88. இன்றைக்கும் அவ்வாறே உள்ளது. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். இப்பொழுது, இந்த ஜனங்கள் அறிந்திருக்க வேண்டும், பாருங்கள். நோவா உபத்திரவ காலத்திற்குள் கொண்டு செல்லப்படும் யூதர்களுக்கு முன்னடையாளமாயிருக்கி றான் என்பதை கவனியுங்கள். ஏனோக்கு உண்மையான செய்திக்கு, சபை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு முன்னடையாளமா யிருக்கிறான். ஏனெனில் ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான், அதன் பிறகு
~~~~~

வெள்ளம் வந்தது. இருவருமே ... முதலாம் தீர்க்கதரிசியாகிய ஏனோக்கு, நோவா தன் வழியில்... தேவன் நோவாவுடன் ஈடுபட வேண்டும் என்பதற்காக வழியிலிருந்து அகற்றப்பட்டான். இப்பொழுது தேவன் மறுபடியும் யூதருடன், யூதரில் மீதியான லட்சத்து நாற்பது நாலாயிரம் பேருடன் ஈடுபடுவதற்கென சபையானது எடுத்துக் கொள்ளப்படும். இதைக் குறித்த வேத வசனங்களை நாம் இங்கு படித்திருக்கி றோம்.

**64-08-16 அவருடைய வார்த்தையை நிரூபித்தல்**

~~~~~

132 அன்றொரு நாள் நான் கண்ட தரிசனம் உங்களுக்கு ஞாபக முள்ளதா? அதன் முன் காட்சி (Preview)? போன ஞாயிறுக்கு முந்தின ஞாயிறு; எத்தனை பேருக்கு ஞாபகமுள்ளது? அது அப்படியே நிறைவேறிக் கொண்டிருக்
~~~~~

கிறது, அதை நாம் பார்த்தோம். சபை என்றழைக்கப்படும் அந்த அசுத்தமான கூட்டம் வருவதைக் கண்டேன் (மிகவும் ஆபாசமானது). பிறகு ஒவ்வொரு தேசத்திலிருந்தும் மணவாட்டி, அவர்களுடைய தேசத்து உடைகளை அணிந்து கொண்டு, கர்த்தருக்கு முன்பாக நடந்தனர். நீங்கள் கவனிப்பீர்களானால், 'உபத்திரவ காலத்துக்கு முன்பு சபை எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று நினைத்தேனே! எடுத்துக்கொள்ளப்படுதல் ஒன்றிருக்கும் என்று நான் நினைத்தேன்'' என்று அவர்கள் கூறும் காலம் வரும்.

133 ''அது ஏற்கனவே நடந்து விட்டது. அதை நீங்கள் அறியவில்லை.'' அப்படித்தான் அவர் ஒரு முறை யோவான் ஸ்நானனைக் குறித்து கூறினார்.

134 அவர்கள், ''எலியா முந்தி வரவேண்டுமென்று தீர்க்கதரிசிகள்,

வேதபாரகர் சொல்லுகிறார்களே'' என்று கேட்டனர்.

135 "அவன் வந்தாயிற்று'' என்றார் அவர். சீஷர்களும் கூட அதை அறிய வில்லை. “அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அலனுக்குச் செய்தார்கள்.' (மத். 17: 12). எடுத்துக் கொள்ளப் படுதலும் அவ்வாறே இருக்கும். நினை யாத மணி வேளையில்... அவர் அப்படி செய்வதாக வாக்களித்துள்ளார். எலியாவை அப்படி காண்பிப்பதாக அவர் வாக்களிக்கவில்லை, ஆனால் மணவாட்டியை அப்படி எடுத்துக் கொள்ளப்போவதாக அவர் வாக்களித் துள்ளார்- நீங்கள் நினையாத நாழிகை யிலே, ஒரு இமைப்பொழுதிலே எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும். அப்பொழுது நீங்கள் விடப்படுவீர்கள். அது தான் அந்த நேரம்!

**64-07-19M எக்காளப் பண்டிகை**

~~~~~

198. மேலும் ஏதோ ஒரு நாளில் அது அதேவிதமாகத்தான் இருக்கும். இயேசு என்ன கூறினார் என்பதற்கு அவர்கள் விழித்துக்கொள்ளலாம். "எலியா முந்தி வரவேண்டும்" என்று வேதபாரகர்கள் கூறு கின்றனரே என்று சீஷர்கள் கேட்டபோது, ''அவன் ஏற்கனவே வந்தாயிற்று நீங்களோ அதை அறியவில்லை" என இயேசு கூறினார்.

199. அதேபோல், அவருடைய வருகையிலும் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கலாம். இந்த நாட்களின் ஒன்றிலே, அவர்கள் உபத்திரவத்திற்குள் செல்லுவார் கள். அவர்கள், சொல்லுவார்கள் "நான் நினைத்தேன், மணவாட்டி இன்னுமாக போய்க்கொண்டிருக்கிறாள் என்று. சபையானது உபத்திரவத்திற்குள்ளாக செல்லுமா?'' நிச்சயமாக. சபையானது
~~~~~

உபத்திரவ காலத்திற்குள் செல்லும், ஆனால் மணவாட்டியல்ல. "அது ஏன் அப்படியாக முதலாவதாக இருக்க வேண்டும்?''

200. அதன்பிறகு, அந்த வார்த்தை "அவள் ஏற்கனவே சென்றுவிட்டாள்” என்று இருக்கும். நீங்கள் அதை அறிய வில்லை. அவர்கள் தொடர்ந்து போய்க் கொண்டிருப் பார்கள். சபைகள் நடத்திக் கொண்டிருப்பார்கள், அதே விதமாக.

## 64-04-16 அவர்கள் கண்கள் திறக்கப்பட்டபோது அவர்கள் அவரைக் கண்டு கொண்டனர்

~~~~~

5 இயேசு அவர்களிடம் திரும்பி 'எலியா ஏற்கனவே வந்தாயிற்று என்று உங்களுக்கு சொல்லுகிறேன். நீங்களோ அறியாமல் போனீர்கள்“ என்று சொன்னார் என்பதை நாம் அறிவோம். இந்நாட்களில் ஒன்றில் சபையானது உபத்திரவ காலத்
~~~~~

திற்குள் இருப்பதை காணும்பட்சத்தில் நம்மை மிகவும் வருத்தமடைய செய்யாதா?

இப்பொழுது ஒரு உபதேசத்தைக் குறித்து பிரசங்கிக்கும்படி வரவில்லை. நான் அப்படி செய்வதில்லை. நான் என்னுடைய சகோதரர்களை மதிக்கிறேன். ஆனால் நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என்றால் நான் இதை மாத்திரம் சற்று சொல்லட்டும். தனிப்பட்ட வகையில், என்னை பொருத்தமட்டில், சபையானது உபத்திரவ காலத்திற்குள் செல்லும், ஆனால் மணவாட்டி அல்ல என்று உறுதியாக விசுவாசிக்கிறேன். மணவாட்டி வீட்டிற்கு செல்லுவாள். பாருங்கள், தேவன் எகிப்து தேசத்திலிருந்து, ஒரு தேசத்தை எப்படி வெளியே அழைத்தாரோ 'அவ்விதமாகவே மணவாட்டியையும் சபையிலிருந்து வெளியே அழைத்து

கொண்டு வருகிறார். புரிந்துக் கொண் டீர்களா?

மணவாட்டியானவள் தெரிந்து கொள்ளப்பட்டவள், அவளோ ஸ்திரீயின் வித்தில் மீதியானவர்கள். இவ்விதமாக தான் இருக்கவேண்டும் என்று தீர்மா னிப்பது அவருடைய சித்தம். அவருடைய முறைமையை எங்கு வைக்க வேண்டும் என்பது அவருடைய அலுவலாய் இருக்கிறது. மீதமுள்ளவர்களை தேவன் முறைமையிலிருந்து (pattern) வெட்டி யெடுக்கிறார். ஸ்திரீயின் வித்தானது காரிருளுக்குள் சென்றது. அது சரியே. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட சபை அல்ல. அவர்கள் ஏற்கனவே கிறிஸ்து வுக்குள் இருந்ததினாலே நியாயந்தீர்க்கப் பட்டு, சுத்திகரிக்கப்பட்டும் இருக்கிறார்கள். வேறு எதினூடாகவும் கடந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. மற்றவர்கள் அதற்குள் இல்லாததினாலே நியாயத்

தீர்ப்பிற்குள் கடந்து செல்லவேண்டியதாய் இருக்கிறது.

## 64-04-10 காலத்தின் வேதவாக்கிய அடையாளங்கள்

~~~~~

279. விளக்குகளை எரியச் செய்யக் கூடிய ஒரு மனிதன் இங்கிருக்கிறார். மரண நிழலின் இடங்களில் உட்கார்ந்து கொண் டிருந்தவர்கள் - சிலர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு, சிலர் ஸ்தாபன மரணத் திலும், சிலர் கோட்பாடுகளின் மரணத்தி லும், சிலர் பாரம்பரியங்களின் மரணத்தி லும், எல்லாவிதமான மரணத்திலும் சிக்குண்டவர்கள் - பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். அப்பொழுது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்த அதே மனிதன் தான் ஆதியில் வெளிச்சம் உண்டாகக்கடவது என்று சொன்னவர். நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற அதே
~~~~~

தேவன் இன்றைக்கு, இப்பொழுது பிரசன்னராயிருக்கிறார். பயப்படாதீர்கள். அவர் விளக்குகளை எரியச் செய்வார். உபத்திரவம் வரும்போது பயப்படாதீர்கள். அவர் தமது ஜனங்களை எடுத்துக்கொண்டு செல்வாரென்று வெளிச்சம் கூறியுள்ளது. அவள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்வதில்லை. அவள் ஒரு போதும் செல்வதில்லை. அவள் உபத்திரவ காலத்தில் பிரவேசிப்பதில்லை என்று அவர் கூறியுள்ளார். அவள் எடுத்துக் கொள்ளப்படுவாள். "சகோ. பிரான்ஹாமே, அவர்கள் எப்படி செல்லப் போகிறார்கள், மிகவும் இருளாயுள்ளதே!" அது எவ்வளவு இருளாயிருந்த போதிலும், உங்களுக்கு முன்னால் உங்கள் கையை நீட்டினால் உங்களால் காண முடியாத அளவுக்கு இருளாய் இருந்தாலும் விளக்குகளை எரியச் செய்யக் கூடிய ஒரு மனிதன் இங்கிருக்கிறார் என்பதை ஞாபகம்

கொள்ளுங்கள். அவர் அந்த சபையை எடுத்துக் கொள்ளப்படுதலில் கொண்டு செல்வார்.

## 63-12-29M விளக்கைப் போடக் கூடிய ஒரு மனிதன் இங்கிருக்கிறார்

~~~~~

அருமையான ஒருவர், படித்த மேதை, ஏழு முத்திரைகள் பிரசங்கிக்கப்பட்ட பிறகு என்னிடம், 'சகோ. பிரன்ஹாமே, நீங்கள் முன்னடையாளத்தை ஆதாரமாகக் கொண்டு பேசுகிறவர். சபை உபத்திரவ காலத்துக்குள் செல்லாமல் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லும் என்பதற்கு நீங்கள் எப்படி முன்னடையாளம் காண் பிக்கப் போகிறீர்கள்?'' என்றார். அவர் சொன்னார்... பாருங்கள், ஒரு சம்பவம் புதிய ஏற்பாட்டில் இருக்குமானால், அதற்கு முன்னடையாளமாக பழைய ஏற்பாட்டில் ஒன்று இருக்கவேண்டும். நான்
~~~~~

உண்மையென்று கூறும் ஒவ்வொன்றுக்கும் பழைய ஏற்பாட்டில் ஒரு முன்னடையாளம் உண்டு. அது ஒரு நிழல். பழையவைகள் வரப்போகும் காரியங்களுக்கு நிழலா யுள்ளன என்று வேதம் கூறுகிறது. அவர் என்னிடம், "பாருங்கள், நீங்கள் பழைய ஏற்பாட்டை நிழலாக எடுத்துக்கொள்கி றீர்கள். இந்த சபையைக் குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்றார்.

**63-08-25M நான் எப்படி ஜெயங்கொள்வது?**

~ ~ ~ ~ ~

36 என்னால் அவருடன் இணங்க முடியவில்லை. ஏனெனில் என்னால் அதைக்காண முடியவில்லை. அது இரட்சிப்புக்கு சம்பந்தமான ஒன்றல்ல. அது கர்த்தருடைய வருகையுடன் சம்பந்தப் பட்டது.

சபை சுத்திகரிக்கப்படுவதற்காக உபத் திரவ காலத்திற்குள் செல்ல வேண்டு

மென்பது அவருடைய கருத்து. ஆனால் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் சபையை சுத்திகரிக்கிறது என்று நான் கூறுகிறேன். அதற்கு அவசியமில்லை... சபை - அதாவது ஸ்தாபன சபை - உபத்திரவகாலத்துக்குள் செல்லுமென்று விசுவாசிக்கிறேன், ஆனால் மணவாட்டி செல்வதில்லை. விவாகம் செய்வதற்கு முன்பு சுத்திகரிக்கப்பட வேண்டிய பெண்ணை நீங்கள் தெரிந்து கொள்வீர்களா? கிறிஸ்துவின் மணவாட்டி தெரிந்துகொள்ளப்பட்டவள், அவள் தெரிந்துக்கொள்ளப்பட்டவள், அவள் தேவனின் மணவாட்டி, இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி.

37 அவர், ''அதற்கு என்ன முன்னடையாளம் காண்பிக்க போகின்றீர்கள் - அதாவது உபத்திரவ காலத்துக்கு முன்பு மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுகிறாள் என்று? சபை உபத்திரவ காலத்தில் உள்ளது என்பதைக் காண்பிக்க எனக்கு வேத

ஆதாரங்கள் உண்டு. ஆறாம் முத்திரை யையபடித்துப் பாருங்கள். அவ்வளவு தான். அவள் உபத்திர காலத்தில் இருக்கிறாள்'' என்றார். ஆனால் நீங்கள் பார்ப்பீர்க ளானால், அதற்கு முன்பு மணவாட்டி சென்றுவிடுகிறாள். அந்த சமயத்தில் அவள் மகிமையில் இருக்கிறாள். அவ ளுக்கு சுத்திகரிப்பு எதுவுமில்லை. பாருங் கள்? ''என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்'' (யோவான் 5:24. நாம் நியாயத்தீர்ப்பில் நிற்பது கூட இல்லையென்று இயேசு வாக்களித்திருக் கிறார். எனவே அவர் என் இடத்தை பரிபூரணமான எடுத்துக்கொண்டதன் நிமித்தம் நான் பரிபூரணமாக விடுதலை யடைந்தேன். நான் மன்னிக்கப்பட்டேன் என்றால் மன்னிக்கப்பட்டு விட்டேன்.

அவர் என்னை அடகு கடையிலிருந்து என்னை மீட்டெடுத்த பிறகு, என்னை அடமானமாகக் கொண்டிருந்தவன் நான் அவனுக்கு சொந்தம் என்று எப்படி கூற முடியும்? இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தினால் எழுதப்பட்ட ரசீது (ஆமென்! பாருங்கள்?) என்னிடம் உள்ளதே!

## 63-08-25M நான் எப்படி ஜெயங்கொள்வது?

~~~~~

124 நாம் கடைசிக் காலத்தில் இருக்கிறோம் என்பதை தெளிவாகப் பார்க்கிறோம். சோதோம்கொமோரா பட்டினங்களின் பாழடைந்தவைகளின் மீது நாம் எப்படி ஒரு நகரைக் கட்ட முடியும்? ஒரே ஒரு போனிக்ஸ் நினைவுச் சின்னம் மாத்திரம் விடப்பட்டுள்ளது - அது கர்த்தராகிய இயேசுவின் வருகையே! தேவனுடைய பார்வையில் நீதியுள்ளவர் களுக்கும் அவருடைய வார்த்தையிலே
~~~~~

ஜீவிக்கிறவர்களுக்கும் ஓர் உலகத்தை, உபத்திரவ காலத்தின் மூலமாக அவர் சுத்திகரித்து, திரும்பவுமாக அதன் நிலைக்கு கொண்டு வரப்போகிறார்.

## 63-07-21 அவர் விசாரிக்கிறவராயிருக்கிறார் நீ கவலை கொள்கிறாயா?

~~~~~

82. இப்பொழுது 'யேகோவா சாட்சிகள்' (Jehovah's Witness) என்னும் குழுவைச் சார்ந்திருந்த என் நண்பர்கள் அநேகர் இங்கிருக்கின்றனர். ஒருக்கால் அவர்களில் சிலர் இன்னும் யேகோவா சாட்சிகளாக இருக்கலாம். அவர்களின் தலைவரான திரு. ரஸ்ஸல் (Russell) என்பவர், இந்த 1,44,000 பேர் கிறிஸ்துவின் இயற்கைக்கு மேம்பட்ட மணவாட்டியைக் குறிப்பதாகக் கருத்து கொண்டிருந்தார். பாருங்கள்? ஆனால் அது உண்மையல்ல.
~~~~~

83. இவர்களுக்கும், சபையின் காலங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. அவர்கள் முற்றிலும் இஸ்ரவேல் ஆவர். இன்னும் சில நிமிடங்களில் அவ்வாக்கியங்களைப் படிக்கப் போகின்றோம். இப்பொழுது, ஆறாவது முத்திரை... இப்பொழுது இந்த இடைவெளி முத்திரைகள் இடையேயுள்ள இந்த 1,44,000 யூதர்கள், சபையானது எடுக்கப்பட்ட பின்னர், உபத்திரவ காலத்தில் அழைக்கப்பட்டு முத்திரிக்கப்பட்டவர்கள். பாருங்கள்? எனவே அவர்களுக்கும் சபையின் காலங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. இது வேதவாக்கியங்களுடன் அருமையாகப் பொருந்துகின்றது. தானியேல் கூறின கடைசி மூன்றரை வாரங்கள் தானியேலின் "ஜனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. புறஜாதிகளுக்கல்ல. தானியேலின் 'ஜனங்களுக்கு, '' தானியேல் ஒரு யூதன்.

## 63-03-24E ஏழாம் முத்திரை

~~~~~

50. சபையின் காலம் முடிவடைந்த பின்னர், மிருகங்கள் தோன்றுவ தில்லை என்றும், அங்கே முழுக்காட்சியும் மாறி விட்டதையும் நாம் கண்டு கொண்டோம். பாருங்கள்? ஆனால் முன்வந்த அவைகள், சபை எடுக்கப்பட்ட பின்னர் உபத்திரவ காலம் வருகின்றது என்பதை நமக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்தன.

## 63-03-24E ஏழாம் முத்திரை

~~~~~